# மூவொரு இறைவன் விழா

*திருவழிப்பாட்டு ஆண்டு* B (*31-05-2015*)

*திருப்பலி முன்னுரை:*

இறை மக்கள் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துக்கள். தூய ஆவியின் பெருவிழாவினை அடுத்து மீண்டும் தொடரும் பொதுக்காலத்தில் முதலில் வரும் ஞாயிற்றுக்கிழமை மூவொரு இறைவன் விழாவினைத் திரு அவை சிறப்பாகக் கொண்டாடுகிறது. ஆட்தன்மையில் தன்னில் முழுமையாக இருக்கும் இறைத் தந்தையும், இறை மகனும், தூய ஆவியாகிய இறையும் மூவர் என்றாலும், இறைத்தன்மையில் ஒன்றாக இருக்கின்றனர். மகத்துவமும், மாண்பும், புகழ்ச்சியும் தொழுகையும் ஒன்றாகவே பெறுகின்றனர்.

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! நம் உயிரைச் சாவினின்று காக்கின்றவரும், பஞ்சத்திலும் நம்மை வாழ் விக்கின்றவருமான நம் இறைவனின் திருப்பெயரால் நல்வாழ்த்துக்கள் கூறி இத் திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு உங்களை அன்போடு வரவேற்கின்றோம். மூவொரு கடவுளின் பிரசன்னம்: ஒற்றுமைக்கும், உறவுக்கும், ஒருமைப்பாட்டிற்கும், ஒரு முன்னுதாரணமாக இருக்கின்றது. ஆண்டவர்மீது நம்பிக்கை கொண்டு அவருடைய நெறிமுறைகளைப் பின்பற்றுவோர் பெறும் ஆசீர்வாதங்களைப் பற்றி இன்றைய இறைவார்த்தைகள் நம்மோடு பேசுகின்றன. ஆண்டவரது நியமங்களையும் கட்டளைகளையும் பின்பற்றுங்கள். அப்பொழுது உங்களுக்கும், உங்களுக்குப் பின்வரும் உங்கள் பிள்ளைகளுக்கும் எல்லாம் நலமாகும். நீங்கள் நெடுநாள் வாழ்வீர்கள். ஆண்டவர் தமக்கு அஞ்சி நடப்போரை கண்ணோக்குகின்றார். அவர்கள் உயிரைச் சாவினின்று காக்கின்றார்: அவர்களைப் பஞ்சத்திலும் வாழ்விக்கின்றார். என்பதே அவ் ஆசீர்வாதங்களாகும். எனவே நாம் கடவுளின் ஆவியால் இயக்கப்படுபவர்களாய் இருந்து நம் முன்மாதிரிகையான வாழ்வால் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்க உறுதி கொண்டவர்களாய் இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**முதல் வாசகம்** ~ முதல் வாசக முன்னுரை ~

ஆவிக்குரியவர்களே, இன்றைய முதல் வாசகம், வரலாற்றில் செயல்படுகின்ற இஸ்ரயேலின் ஆண்டவரே உண்மையான கடவுள் என்பதை எடுத்துரைக்கிறது. தமது உரிமைச்சொத்தாக இஸ்ரயேல் இனத்தை தேர்ந்தெடுத்து வழிநடத்திய கடவுளின் கட்டளைகளை கடைப்பிடித்து வாழ மாறு மோசே அழைப்பு விடுக்கிறார். எப்பொழுதும் கடவுளுக்கு உண்மை உள்ளவர்களாய் வாழும் வரம் வேண்டி இந்த வாசகத்துக்கு கவனமாக செவிமடுப்போம்.

**இணைச்சட்ட நூலிலிருந்து வாசகம் 4: 32~34, 39~40**

மோசே மக்களை நோக்கிக் கூறியது: உங்களுக்கு முற்பட்ட பண்டைக் காலத்தைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். கடவுள், உலகில் மனிதனைப் படைத்த நாள்முதல், வானத்தின் ஒரு முனைமுதல் மறு முனைவரைக்கும் எங்காவது இத்தகைய மாபெரும் செயல் நடந்ததுண்டோ? அல்லது இதுபோல் கேள்விப்பட்டது உண்டா? நெருப்பின் நடுவிலிருந்து பேசிய கடவுளின் குரலொலியைக் கேட்டும், நீங்கள் உயிர் வாழ்ந்தது போல் வேறு எந்த மக்களினமாவது வாழ்ந்ததுண்டா? அல்லது, உங்கள் கடவுளாகிய ஆண்டவர் எகிப்தில் உங்கள் கண்முன்னே உங்களுக்குச் செய்த அனைத்தையும் போல, சோதனைகள், அடையாளங்கள், அருஞ்செயல்கள், போர், வலிய கரம், ஓங்கிய புயம் மற்றும் அச்சுறுத்தும் நிகழ்ச்சிகள் மூலம் ஓர் இனத்தை வேறொரு நாட்டினின்று தமக்கென உரிமையாக்கிக் கொள்ள முன்வரும் கடவுள் உண்டா? ஹமேலே விண்ணிலும் கீழே மண்ணிலும் ஆண்டவரே கடவுள், அவரைத் தவிர வேறு எவரும் இலர்' என இன்று அறிந்து, உங்கள் உள்ளத்தில் இருத்துங்கள். நான் இன்று உங்களுக்குக் கட்டளையிடும் அவரது நியமங்களையும் கட்டளைகளையும் பின்பற்றுங்கள். அப்பொழுது உங்களுக்கும், உங்களுக்குப் பின்வரும் உங்கள் பிள்ளைகளுக்கும் எல்லாம் நலமாகும். மேலும், உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்கு எக்காலத்திற்கும் கொடுக்கும் மண்ணில் நீங்கள் நெடுநாள் வாழ்வீர்கள்.

~ இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.

~ இறைவா உமக்கு நன்றி

**பதிலுரைப் பாடல்**

பல்லவி: ஆண்டவர் தமது உரிமைச் சொத்தாகத் தெரிந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர்.

**திபா 33: 4-5. 6,9. 18-19. 20,22**

ஆண்டவரின் வாக்கு நேர்மையானது் அவருடைய செயல்கள் எல்லாம் நம்பிக்கைக்கு உரியவை. அவர் நீதியையும் நேர்மையையும் விரும்புகின்றார் அவரது பேரன்பால் பூவுலகு நிறைந்துள்ளது. **-பல்லவி**

ஆண்டவரது வாக்கினால் வானங்கள் உண்டாயின் அவரது சொல்லின் ஆற்றலால் வான் கோள்கள் எல்லாம் உருவாயின. அவர் சொல்லி உலகம் உண்டானது் அவர் கட்டளையிட, அது நிலைபெற்றது. **-பல்லவி**

தமக்கு அஞ்சி நடப்போரையும் தம் பேரன்புக்காகக் காத்திருப்போரையும் ஆண்டவர் கண்ணோக்குகின்றார். அவர்கள் உயிரைச் சாவினின்று காக்கின்றார் அவர்களைப் பஞ்சத்திலும் வாழ்விக்கின்றார். **-பல்லவி**

நாம் ஆண்டவரை நம்பியிருக்கின்றோம் அவரே நமக்குத் துணையும் கேடயமும் ஆவார். உம்மையே நாங்கள் நம்பியிருப்பதால், உமது பேரன்பு எங்கள்மீது இருப்பதாக! **-பல்லவி**

**இரண்டாம் வாசகம்** ~ இரண்டாம் வாசக முன்னுரை ~

ஆவிக்குரியவர்களே, இன்றைய இரண்டாம் வாசகம், நாம் கடவுளின் பிள்ளைகளாக வாழும்போதுதான், உரிமைப்பேறு பெற்றவர்களாய் இருக்க முடியும் என்று எடுத்துரைக்கிறது. பிள்ளைகளுக்குரிய மனப்பான்மையினாலே நாம் கடவுளை 'அப்பா, தந்தையே!' என அழைக்கிறோம் என்று புனித பவுல் எடுத்துரைக்கிறார். கடவுளுக்கு விருப்பமான பிள்ளைகளாக வாழும் வரம் வேண்டி இந்த வாசகத்துக்கு கவனமாக செவிமடுப்போம்.

**திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 8: 14~17**

சகோதரர் சகோதரிகளே, கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள். மீண்டும் அச்சத்திற்கு உள்ளாக்கும் மனப்பான்மையை நீங்கள் பெற்றுக் கொள்ளவில்லை மாறாகக் கடவுளின் பிள்ளைகளுக்குரிய மனப்பான்மையையே பெற்றுக்கொண்டீர்கள். அதனால் நாம், ஹஹஅப்பா, தந்தையே" என அழைக்கிறோம். நாம் இவ்வாறு அழைக்கும்போது நம் உள்ளத்தோடு சேர்ந்து தூய ஆவியாரும் நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்குச் சான்று பகர்கிறார். நாம் பிள்ளைகளாயின், உரிமைப் பேறு உடையவர்களாய் இருக்கிறோம். ஆம், நாம் கடவுளிடமிருந்து உரிமைப் பேறு பெறுபவர்கள், கிறிஸ்துவின் பங்காளிகள். அவருடைய துன்பங்களில் நாம் பங்கு பெற வேண்டும் அப்போதுதான் அவரோடு மாட்சியிலும் பங்கு பெறுவோம்.

~ இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு

~ இறைவா உமக்கு நன்றி

## நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி

அல்லேலூயா, அல்லேலூயா!அல்லேலூயா, அல்லேலூயா! இருந்தவரும் இருக்கின்றவரும் வரவிருக்கின்றவரும் எல்லாம் வல்லவருமான கடவுள், தந்தை, மகன், தூய ஆவியாருக்கு மகிமை உண்டாகுக. அல்லேலூயா. அல்லேலூயா

## நற்செய்தி வாசகம்

மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 28: 16-20

அக்காலத்தில் பதினொரு சீடர்களும் இயேசு தங்களுக்குப் பணித்தபடியே கலிலேயாவிலுள்ள ஒரு மலைக்குச் சென்றார்கள். அங்கே அவரைக் கண்டு பணிந்தார்கள். சிலரோ ஐயமுற்றார்கள். இயேசு அவர்களை அணுகி, ஹஹவிண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது. எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்“ என்று கூறினார்.

- இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
- கிறிஸ்துவே உமக்கு புகழ்.

**விசுவாசிகள் மன்றாட்டுகள்:**

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**தூய தந்தையே இறைவா!**

உம் பணியில் உம்மோடு பங்காளிகளாக இருக்கும் எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலைப் பணியாளர்கள் அனைவரும் உமது நியமங்களையும் கட்டளைகளையும் சிறப்பாகப் பின்பற்றி தங்கள் வாழ்வாலும் பணியாலும் எல்லா மக்களித்தாரையும் உம் சீடராக்கும் வலிமையை அவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**இருந்தவரும்** இருக்கின்றவரும் வரவிருக்கின்றவரும் எல்லாம் வல்லவருமான தந்தையே இறைவா!

உம்முடைய மக்களாகிய நாங்களும்: உமது ஆவியால் இயக்கப்பட்டு, உமது கட்டளைகளுக்குப் பணிந்து நடந்து உம் சீடர்களாக வாழ அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**புதுமைகளின் நாயகராம் இறைவா,**

பேய்களை ஒட்டவும் நோய்களை நீக்கவும் இறைமகன் இயேசு அளித்த அதிகாரம் எம்மில் செயல்படவும், எங்கள் நம்பிக்கையால் உலகெங்கும் நற்செய்தியைப் பறை சாற்றி, உமது அரசை நிறுவவும் ஆற்றல் தர வேண்டுமென்றும், நோய், விரக்தி, சிறைவாழ்வு, வதைமுகாம் இவற்றுள் நின்று மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கும் அனைவரையும் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**விண்ணக தந்தையே இறைவா,**

இவ்வுலகில் வாழும் மாந்தர் அனைவரும், மூவொரு இறைவனாகிய நீரே உண்மை கடவுள் என்பதை அறிந்துகொள்ளவும், உமது பிள்ளைகளாக அன்பிலும் நீதியிலும் ஒற்று மையிலும் வாழவும் உதவ வேண்டுமென்றும், குடும்பப் பிரச்சனைகளால் அமைதியிழந்தும் வாழ்ந்துகொண்டிருக்கும் அனைவர் மேலும் மனமிரங்கி அவர்களின் வேதனைகள் அனைத்தையும் மகிழ்ச்சியாக மாற்றிட வேண்டுமென்றும், இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஆறுதல் அனைத்திற்கும் ஊற்றாகிய இறைவா!**

ஆதரவற்றோர், கைவிடப்பட்டோர், நோயுற்றோர் மற்றும் வறுமையில் வாடுவோர் அனைவரும் உமது பாதுகாப்பையும், பராமரிப்பையும் பெற்று மகிழ்ந்திட வேண்டுமென்றும், உடலின் உயிர்ப்பினால் மாட்சிபெற்ற உம் திருமகனைப் போன்று, உள்ளத்தின் உயிர்ப்பினால் உமது மாட்சியில் பங்குபெறும் தகுதி அடையுமாறு எம் நாட்டினர் அனைவருடைய வாழ்வையும் புதுப்பிக்க வேண்டுமென்றும், உலகப் பற்றினால் உண்மைக் கடவுளாகிய உம்மை மறந்து வாழும் இளைஞர்கள் நீரே ஆண்டவர், நீரே கடவுள் என்பதை உணர்ந்து உம்மில் புதிய வாழ்வைக் காண மனமாற்றம் பெற வேண்டுமென்று உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

**பிரிந்ததை இணைப்பவரே இறைவா,**

கிறிஸ்துவின் பெயரால் பல்வேறு சபைகளாக வாழும் கிறிஸ்தவர்கள் அனைவரும், தூய ஆவியாரின் வல்லமையால் ஒன்றிணைந்து, ஒரே திருச்சபையாக கிறிஸ்துவுக்கு சான்று பகர உதவவும், எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவரும், தூய ஆவியாரின் ஆலயங்களாக வாழ்ந்து, எங்கள் சொற்களாலும் செயல்களாலும் கிறிஸ்து இயேசுவுக்கு சான்று பகரும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# இன்றைய சிந்தனை

எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்

எல்லா நிகழ்வுகளிலும் தந்தை மகன் தூய ஆவியாரை அழைத்தே நாம் காரியங்களை செய்கின்றோம். திருமுழுக்கு பெற்றது கூட அந்த திரியேக கடவுளை அழைத்தே பெற்றுக் கொண்டோம். இவர்கள் மூவராக இருந்தாலும், ஓரே நிலைப்பாடும், ஓரே தெய்வீகத் தன்மையும், ஒத்த செயல்பாடும் கொண்டவர்களாகவே திருஅவையில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். மூவருமே தொடக்க முதல் இறுதிவரை நம்முடனே இருக்கின்றார்கள்.

இந்த மூவொரு கடவுளை விசுவசிக்கின்ற நாம், அவரைப் போல படைத்து, பாராமரித்து, பாதுகாக்கின்ற பணிகள் பலவாறு இருந்தாலும், ஒத்த செயல்பாடு நம்மிலே இருக்குமேயானால், சாட்சிகளாக நாம் வாழ்ந்நதிட முடியும். இவ்வாறு வாழும் நம்மிலே நம்முடனே இவர்கள் இருந்து நம்மை பராமரித்து, பாதுகாப்பார்கள் என்பதிலே எந்த மாற்றுச் சிந்தனையும் இல்லை.

**மன்றாட்டு:**

இறைவா, உம் அன்புக்கு நாங்கள் சாட்சி பகர எங்களுக்கு அருள்தாரும்.